
## வல்லினம்






யானைகள் எப்படி வலிமையாக இருக்கின்றனவோ அப்படியே க், ச், ட், த், ப், ற் – என்ற எழுத்துகளும் வலிய ஓசை உடையவை, எனவே இவற்றுக்கு வல்லினம் என்று பெயரிடுவோம்.

## மெல்லினம்






முயல்கள் எப்படி மென்மையாக இருக்கின்றனவோ அப்படியே ங் ஞ், ண், ந், ம், ன் – என்ற எழுத்துகளும் மெல்லிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு மெல்லினம் என்று பெயரிடுவோம்.

## இடையினம்




மான்கள் யானையைப் போன்று வலிமையாகவும் இல்லை, முயலைப் போன்று மென்மையாகவும் இல்லை, இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அது போல ய், ர், ல், வ், ழ், ள் – என்ற எழுத்துகளும், வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இவற்றுக்கு இடையினம் என்று பெயரிடுவோம்.



ஃ என்பது ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எனப்படும்.

எழுத்துகளின் பெயர்கள் இனிமையாக இருக்கின்றன அப்படித்தானே.

**உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துக்களை வட்டமிட்டுக் காட்டுக**

# 4 கல்யாணமாம் கல்யாணம்!

3M5MCG

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்





தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாராம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணை
திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரோம்

– நாட்டுப்புறப் பாடல்




## வாங்க பேசலாம்

- இப்பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.
- உனது பகுதியில் வழங்கும் உனக்குப் பிடித்த நாட்டுப்புறப் பாடல்களை அறிந்து வகுப்பறையில் பாடுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.



கல்யாணமாம் ____________

____________ ____________

____________ ____________

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. பூலோகமெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) பூலோக + மெல்லாம் (ஆ) பூலோகம் + மெல்லாம்

(இ) பூலோகம் + எல்லாம் (ஈ) பூலோக + எல்லாம்

2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர் ......................................

(அ) பூனை (ஆ) ஒட்டகச்சிவிங்கி

(இ) யானை (ஈ) குரங்கு

3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .........................

(அ) பாலையெல்லாம் (ஆ) பாலைஎல்லாம்

(இ) பாலைல்லாம் (ஈ) பாலெல்லாம்

## இணைந்து செய்வோம்

கோப்பைகளை அவற்றின் சரியான தட்டுகளோடு பொருத்துக:

| | | |
|---|---|---|
| காணோமாம் | ______________ | வருகிறோம் |
| வாங்கி வச்ச | ______________ | பூனையை |
| வாறோம் | ______________ | வாங்கிவைத்த |
| பூனைய | ______________ | காணவில்லையாம் |

### சிந்திக்கலாமா?




இப்பாடலில் வரும்
பூனைக்கும்
பூனைக்கும் பதிலாக
யானைக்கும்
பூனைக்கும்
கல்யாணம் ஏற்பாடு
செய்திருந்தால்
எவ்வாறு இருக்கும்?

வகுப்பறையில்
பேசுக...



# கலையும் கைவண்ணமும்

## வண்ணமிட்டு மகிழ்க





**செயல் திட்டம்**

உமது பகுதியில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் இரண்டினை அறிந்து வருக.

# 5 மாணவர்கள் நினைத்தால்...



சிறுமி மேரி மகிழ்வோடு துள்ளிக் குதித்து ஓடிவந்தாள், தனது தோழி மகிழினியைப் பார்க்க... அவளிடம், "இன்று காலை எங்கள் வீட்டுப்பசு கன்று ஈன்றுள்ளது, இனி நான் எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியுடன் விளையாடுவேன்" என்றாள். அதைக்கேட்ட மகிழினி, "என்னையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்" என்றாள்.

அப்போது மேரியின் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் ஒரே கும்பல்......ஓடிச்சென்று பார்த்தனர் அவர்கள் கண்ட காட்சி கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்வதாக இருந்தது...... கன்றை ஈன்ற பசு தனது கழிவினை வெளியே தள்ள முடியாமல் இறந்துபோயிருந்தது. பாதி வெளிவந்திருந்த கழிவில் நிறைய நெகிழிக் குப்பைகள் காணப்பட்டன. அந்நெகிழியால் தான் இறப்பு ஏற்பட்டதாகக் கால்நடை மருத்துவர் கூறிக் கொண்டிருந்தார்.

H8L15Z

வேதனையுடன் பள்ளிக்குச் சென்றனர் மேரியும் மகிழினியும். சோகமாக அமர்ந்திருந்த இருவரையும் அழைத்துக் காரணம் கேட்டார் வகுப்பு ஆசிரியர். பிறகு, "நெகிழிகளைப் பயன்படுத்துவதால் பல தீமைகள் ஏற்படுகின்றன. மட்காத இந்தக் குப்பைகளால் சாக்கடைகளில் நீர்தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு, ஈ மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகி நோய் பரவுகிறது. நெகிழிக் குப்பைகளை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்படைகிறது. இதனால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக நம்மைத் தாக்குகிறது. இதனால் தோல் நோய்கள் ஏற்படுகின்றன", என்று விளக்கினார். இதுபற்றிப் பேசிக்கொண்டிருப்பதை விட்டு விட்டுச் செயலில் இறங்குவோம் என்றார். பள்ளியின் நலன் காக்கும் பள்ளி மேலாண்மைக் குழுவினைக் கூட்டி, நெகிழி பற்றிய தீமைகளை எடுத்துரைத்தார்.

பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், ஊர்ப் பொதுமக்கள் ஆகியோரைக் கொண்டு நெகிழி விழிப்புணர்வு பேரணி நடத்தத்

தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்கு தடையின்றியும் படித்தல், விவரித்தல்




தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி வாசகங்களைக் கூறிக் கொண்டே கிராமத்தின் அனைத்துத் தெருக்களிலும் பேரணியாக வந்தனர்.

இம்மாதிரியான விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களிடம் கொடுத்து நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். மேலும் ஒவ்வொரு மாணவனும் பயன்படுத்தப்பட்ட காகிதங்களைக் கொண்டு பைகள் செய்து வைத்திருந்தனர் . அதனை அவ்வூரின் அனைத்துக் கடைகளிலும் கொடுத்து அந்தப் பைகளைப் பயன்படுத்தச் சொல்லி நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். உள்ளூர் மக்களிடம் இனி கடைகளில் பொருட்கள் வாங்கும்போது துணிப்பைகளைக் கொண்டு செல்ல அறிவுறுத்தினர்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்ற ஆன்றோரின் வாக்கிற்கு ஏற்ப இச்சிறு பிள்ளைகளின் முயற்சியால் அந்த ஊர் நெகிழியற்ற ஊராக மாறி வருகிறது ..........



## வாங்க பேசலாம்

- நெகிழியினால் ஏற்படும் தீமைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- நெகிழியை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்ற இடங்களாக எவற்றைக் கருதுகிறாய்? அவ்விடங்களில் நெகிழிக்குப் பதிலாக வேறு என்ன பொருள்களைப் பயன்படுத்தலாம் என வகுப்பறையில் கலந்துரையாடுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. முயற்சி இச்சொல்லின் பொருள் ........................................

(அ) ஆக்கம் (ஆ) இடைவிடாத உழைப்பு

(இ) இயக்கம் (ஈ) பக்கம்

2. ஆன்றோர் இச்சொல்லின் பொருள் ........................................

(அ) பெற்றோர் (ஆ) உற்றோர்

(இ) சுற்றோர் (ஈ) பெரியோர்

3. வைத்திருந்தனர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................................

(அ) வைத்து + யிருந்தனர் (ஆ) வைத் + இருந்தனர்

(இ) வைத்து + இருந்தனர் (ஈ) வைத் + திருந்தனர்

4. வீதியெங்கும் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) வீதி + எங்கும் (ஆ) வீதி + யெங்கும்

(இ) வீதியெ + ங்கும் (ஈ) வீதி + அங்கும்

5. நெகிழி + அற்ற என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...................................

(அ) நெகிழிஅற்ற (ஆ) நெகிழியற்ற

(இ) நெகிழ்அற்ற (ஈ) நெகிழ்யற்ற

6. பாதிப்பு + அடைகிறது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

(அ) பாதிப்அடைகிறது (ஆ) பாதிப்புஅடைகிறது

(இ) பாதிப்படைகிறது (ஈ) பாதிபடைகிறது

71TPJR

## வினாக்களுக்கு விடையளி

1. மேரி இனி யாருடன் விளையாடப் போவதாகக் கூறினாள்?

2. பசு எதனால் இறந்தது?

3. நெகிழியினால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுக.

4. நெகிழி விழிப்புணர்வு வாசகம் ஒன்றினை உருவாக்குக.

## பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக

1. நெகிழியற்ற ............................................ உருவாக்குவோம். (உலகை / உளகை)

2. நெகிழியை ஒழிப்போம் ......................................... காப்போம். (மன்வளம் / மண்வளம்)

3. மேரி ..................................... குதித்து ஓடிவந்தாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)

4. எறும்பு ............................................ கல்லும் தேயும். (ஊரக் / ஊறக்)

5. துணிப்பை என்பது ............................................ (எளிதானது / எலிதானது)



### செயல் திட்டம்

மட்கும் பொருள்களைக் கொண்டு பைகள், கூடைகள் போன்றவற்றினை உமது பெற்றோர் உதவியுடன் செய்து வருக.

## இணைந்து செய்வோம்

நெகிழிப் பொருள்களுக்கு மாற்றாக எளிதில் மட்கும் பொருள்களாக எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைப் பட்டியலிடுக.

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

## சொற்களை இனம்கண்டு அதற்குரிய பெட்டிக்குக் கீழே எழுதுக.

**கண்ணாடித்துண்டு, நெகிழிப்பை, காகிதத்தாள், சணல்பை, பீங்கான் தட்டு, இலை**




1. ______________
2. ______________
3. ______________




1. ______________
2. ______________
3. ______________

# ஒருமை, பன்மை அறிவோமா?

7G3NJF

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

**ஒருமைச் சொல்லுக்கு உரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்**



- பந்து ______
- ஆமை ______
- முயல் ______
- பூனை ______



- பூ ______
- விழா ______
- பசு ______
- வினா ______





- படம் ______
- மரம் ______
- சிங்கம் ______
- காகம் ______

- பல் ______
- கல் ______
- சொல் ______
- புல் ______





- முள் ______
- தாள் ______
- ஆள் ______
- பொருள் ______

# 6 துணிந்தவர் வெற்றி கொள்வர்



மூன்றாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் வகுப்பு ஆசிரியர் ஒரு போட்டியை அறிவித்தார். ஓர் அறையின் நடுவில் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த அறையினுள் சென்று பெட்டியினைத் தூக்கி வருபவரே வெற்றியாளர் என்பதே அப்போட்டியாகும்.

அனைத்து மாணவர்களும் ஆவலுடன் பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையினுள் சென்றனர். அறையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பெட்டி உருவ அளவில் பெரியதாக இருந்தது. அதனைக் கண்டவுடன் மாணவர்கள் பலர் தங்களால் அப்பெட்டியினைத் தூக்க இயலாது எனப் போட்டியிலிருந்து விலகி விட்டனர். மேலும் சிலர் பெட்டிக்கு அருகே சென்று பின்னர் தங்களால் பெட்டியைத் தூக்க இயலவில்லை என்றால் மற்றவர்கள் சிரிப்பார்களே என்று நினைத்துப் போட்டியில் கலந்து கொள்ளாமல் திரும்பிவிட்டனர். கவியரசி என்ற மாணவி மட்டும் முயற்சி செய்து பார்ப்போமே என்று எண்ணி, பெட்டியினை நகர்த்தியபோது பெட்டி எளிதாக நகர்ந்தது. உடனே, அம்மாணவி பெட்டியினை எளிதாகத் தூக்கினாள்.

கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள்/ ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துதல்



பிற மாணவர்கள் அனைவரும் இதனை வியப்புடன் பார்த்தனர். பின்னர் தயக்கம் விலகி அனைவரும் ஓடிச்சென்று தாங்களும் பெட்டியினை தூக்கிப் பார்த்தனர். பெட்டி தூக்குவதற்குச் சுலபமாக இருந்தது. மாணவ, மாணவிகள் ஆசிரியரிடம் சென்று பெட்டி பெரியதாக இருந்ததால் நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றனர். அதற்கு ஆசிரியர் அது காகிதத்தால் செய்த பெட்டி என்று மாணவர்களிடம் விளக்கினார். மேலும் ஒரு செயலில் இறங்குவதற்குமுன் சிந்திக்க வேண்டும், ஆனால் முயற்சி செய்யாமல் இருக்கக் கூடாது. நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும் என அறிவுறுத்தினார்.

நீங்கள் எல்லாரும் தயக்கம் காட்டியதால் வெற்றி பெறவில்லை. தன்னால் முடியும் என்று நம்பி கவியரசி முயன்றதால் வெற்றி பெற்றாள். எனவே அன்புக் குழந்தைகளே,

"தோல்வியின் அடையாளம் தயக்கம்
வெற்றியின் அடையாளம் முயற்சி
துணிந்தவர் தோற்பதில்லை
தயங்கியவர் வென்றதில்லை"



நாம் விதைக்கும் விதைகளில் முயற்சியுடன் மண்ணைப் பிளந்து கொண்டு வருபவையே செடிகளாகின்றன. தயங்கி நிற்பவை தங்கி விடுகின்றன. அதுபோல கவியரசி தயங்காமல் துணிச்சலாகச் செயல்பட்டதால் வெற்றி பெற்றாள் எனக் ஆசிரியை கூறினார். கவியரசிக்குப் பாராட்டுகளையும் பரிசுகளையும் வழங்கினார். கவியரசியும் மகிழ்ச்சியடைந்தாள்.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்."

## வாங்க பேசலாம்

- போட்டி நடந்த இந்த வகுப்பறையில் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?
- பளு தூக்குதல் போன்ற கடினமான வேலைகளை ஆண் பெண் இருவராலும் செய்ய முடியுமா? உனது கருத்து என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) வகுப்பு + அரை (ஆ) வகுப்பு + அறை

(இ) வகு + அறை (ஈ) வகுப் + அறை

2. இகழ்ச்சி என்ற சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) மகிழ்ச்சி (ஆ) மதிப்பு

(இ) அவமதிப்பு (ஈ) உயர்வு

3. பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....................................

(அ) சிறிய (ஆ) நிறைய

(இ) அதிகம் (ஈ) எளிய

4. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) சாதனை (ஆ) மகிழ்ச்சி

(இ) நன்மை (ஈ) தோல்வி

5. மண்ணைப்பிளந்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) மண் + பிளந்து (ஆ) மண்ணைப் + பிளந்து

(இ) மண்ணை + பிளந்து (ஈ) மன் + பிளந்து

## வினாக்களுக்கு விடையளி

1. மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?

2. மாணவ மாணவிகள் போட்டியில் பங்கேற்காததற்குக் காரணங்கள் யாவை?

3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

## பாடப் பொருளை வரிசைப்படுத்துவோமா?

1. இவ்வளவு பெரிய பெட்டியினை நம்மால் தூக்க இயலாது என்றனர் சிலர்.
2. ஆசிரியரும் மாணவரும் கவியரசியைப் பாராட்டினர்.
3. தம்மால் முடியும் என்று முயன்றதால் கவியரசி வெற்றி பெற்றாள்.
4. ஆசிரியர் ஒரு போட்டியினை அறிவித்தார்.
5. அறையின் நடுவே ஒரு பெட்டி இருந்தது.


## பழத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கலாமா?




எ. கா: 1. ஆசிரியர்


2. _______________
3. _______________
4. _______________
5. _______________
6. _______________
7. _______________
8. _______________
9. _______________
10. _______________

## பொருத்தமான எதிர்ச்சொல் சாவியைக் கொண்டு பூட்டைத் திறப்போமா?





## இணைந்து செய்வோம்

மாணவர்களுக்கு வேண்டிய குணங்களைக் கொண்ட மீன்களுக்கு மட்டும் வண்ணமிடுக



## மொழியோடு விளையாடு

அம்புக்குறியுடன் கூடிய சுழல் அட்டையில் மொழிமுதல் எழுத்துகளை எழுதிக் கொள்ள வேண்டும். மாணவர்களை வட்ட வடிவில் அமர வைத்து இந்த அட்டையினைக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அம்புக்குறியினை வேகமாகச் சுற்றி விடுவர். அம்புக்குறி எந்த எழுத்தில் நிற்கிறதோ, அந்த எழுத்தில் தொடங்கும் ஏதேனும் ஒரு சொல்லை அந்த மாணவர் கூறவேண்டும். இவ்வாறே அனைத்து மாணவரையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும். பயன்படுத்திய பின்பு எழுத்துகளை மாற்றி மீண்டும் பயன்படுத்தவேண்டும்.




## கலையும் கைவண்ணமும்

பயன்படுத்திய மற்றும் உபயோகமற்ற பொருள்களைக் கொண்டு பல்வேறு உருவங்கள் செய்து மகிழ்க.






**செயல் திட்டம்**

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது போன்று தன்னம்பிக்கையை வளர்க்கும் ஏதேனும் ஐந்து பொன்மொழிகள் மற்றும் பழமொழிகளை எழுதித் தொகுத்து வருக.

# 7 சான்றோர் மொழி



L2J2CY

## இனியவை நாற்பது

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது

– பூதஞ்சேந்தனார்

## பாடல் பொருள்

கற்றவர்களின்முன் தான் கற்ற கல்வியைக் கூறுதல் இனிமையானது. அறிவில் மேம்பட்டவர்களுடன் சேர்ந்திருப்பது மிகவும் இனிமையானது. எள் அளவு சிறியதாயினும் தான் பிறரிடம் கேட்டுப் பெறாமல், பிறருக்குக் கொடுத்தல் எல்லாவற்றையும்விட இனிமையானதாகும்.

### பொருள் அறிவோம்

மிக்கார் : அறிவில் மேம்பட்டவர்
எள்துணை : எள் அளவு
எத்துணையும் : எல்லாவற்றிலும்
மாண்பு : பெருமை

### நூலைப்பற்றி...

இந்நூல் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்டது. வாழ்க்கைக்கு நன்மை தரும் இனிய கருத்துகளைக் கூறுவது. நாற்பது பாடல்களைக் கொண்டது. எனவே இனியவை நாற்பது என்று அழைக்கப்படுகிறது.

செய்யுளைத் தெளிவான உச்சரிப்புடன் படித்தல், அதன் சரியான பொருளைப் புரிந்து கொண்டு கருத்தை வெளிப்படுத்துதல்.



## வாங்க பேசலாம்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக்காட்டுக.
- கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- உன் நண்பனின் தேவை அறிந்து அவன் கேட்காமலேயே உதவிய அனுபவம் உனக்கு உண்டா? அதில் உனக்கு மகிழ்ச்சியா? வருத்தமா? ஏன்? கலந்துரையாடு...



## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ....................................
   (அ) பாடுதல் (ஆ) வரைதல்
   (இ) சொல்லுதல் (ஈ) எழுதுதல்

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் .......................
   (அ) கொடுத்தல் (ஆ) எடுத்தல்
   (இ) தடுத்தல் (ஈ) வாங்குதல்

3. மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....................................
   (அ) அறிவிலாதார் (ஆ) அறிந்தோரை
   (இ) கற்றோரை (ஈ) அறிவில்மேம்பட்டவர்

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ..................................
   (அ) பிறரிடம் கேட்டுப் பெறாது (ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது
   (இ) பிறரிடம் கொடுப்பது (ஈ) பிறருக்கு கொடுக்காது

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் .........................
   (அ) தேடுதல் (ஆ) பிரிதல்
   (இ) இணைதல் (ஈ) களைதல்



## பொருள்பட எழுதிப் படித்து மகிழ்க

1. என க்குஇனி ப்புபி டிக்கும்

_______ _______ _______

2. உழை ப்புஉ யர்வுத ரும்

_______ _______ _______

3. மர ம் வள ர்ப்போ ம்ம ழைபெ றுவோம்

_______ _______ _______ _______

4. சுத் தம்சு கம்த ரும்

_______ _______ _______

5. இனி யதமி ழில்பே சுங்கள்

_______ _______ _______

## நீ எதை விரும்புவாய்? ஏன்? கலந்துரையாடுக





## உன்னை அறிந்துகொள்

- உன் நண்பனை உனக்குப் பிடிக்கக் காரணங்கள் எவை?
- உன்னிடத்தில் உனக்குப் பிடிக்காதது எது?
- வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.



### சிந்திக்கலாமா?


காதரும் அப்துலும் சகோதரர்கள், இருவரும் தங்களுக்குக் கிடைக்கும் சிறு தொகையைச் சேமித்து வருகின்றனர். அந்த ஆண்டு ஏற்பட்ட புயல் பாதிப்பினை அறிந்த காதர் புயல் நிவாரண நிதிக்காக, தான் உண்டியலில் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுக்க நினைக்கிறான். அவனின் தம்பி அப்துல், தனது சேமிப்பில் இருந்து கிடைத்த தொகையினைக் கொண்டு பிடித்தமான பொருளை வாங்கிக் கொள்ள நினைக்கிறான். இவர்கள் இருவரில் நீ யாராக இருக்க விரும்புகிறாய்? அதற்குரிய காரணங்களைக் கூறு.



### செயல் திட்டம்

'கல்வி' என்ற அதிகாரத்தில் இருந்து எவையேனும் ஐந்து திருக்குறள்களைப் படித்து, எழுதி வருக.

# 8 நூலகம்




மாமா!.......மாமா! என அழைத்தபடி தேனருவி வீட்டிற்குள் வந்தாள்.

**மாமா:** என்னம்மா! தேனருவி ஏன் இப்படி ஓடி வருகிறாய்?

**தேனருவி:** நான் வழக்கமாகப் பள்ளிக்கூடம் போகும் வழியில் உள்ள ஒரு கட்டடத்தைத் தோரணம் கட்டி அழகுபடுத்தியிருந்தார்கள். அதில் நூலகம் என்று எழுதியிருக்கு அப்படின்னா... என்ன மாமா....?

**மாமா:** அதுவா! நூல்களைச் சேமித்து வைத்திருக்கும் இடம்தான் நூலகம். அது ஒரு பொது இடம். அங்கு அனைவரும் வந்து புத்தகம் படிப்பாங்க ! இன்று "நூலக தினம்" அதைக் கொண்டாடுவதற்காக நூலகத்தை அழகுபடுத்தியிருப்பார்கள்.

கேட்கும் செய்திகளைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துதல்




**தேனருவி:** அப்படியா? நாமும் சென்று நூலக தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வோமா?.

**மாமா:** சரி தேனருவி! வா போகலாம்.

**தேனருவி:** நூலகத்தைப் பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்லுங்க... மாமா.

**மாமா:** சொல்கிறேன் கேள், 'நூல் + அகம் = நூலகம்'. பல்வேறு துறை சார்ந்த நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடமே நூலகம் ஆகும். நூல் நிலையம், புத்தகச் சாலை என்பன நூலகத்தின் வேறு பெயர்களாகும்.

**தேனருவி:** மாமா இங்கு என்னென்ன நூல்கள் இருக்கும்?

**மாமா:** நூலகத்தில் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழ், ஆங்கிலம், மற்றும் வேறு பல மொழிகளைச் சார்ந்த இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்கள், தத்துவ நூல்கள், வரலாற்று நூல்கள், பூகோள நூல்கள் போன்றவையும் இடம் பெற்றிருக்கும்.

நூல்கள் மட்டுமின்றி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் இதழ்கள் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும்.



**தேனருவி:** அடேங்கப்பா ! நூலகத்தில் இவ்வளவு வகை நூல்களா? அது சரி மாமா நூலகத்தினால் நமக்கு என்ன பயன்?

**மாமா:** ம்.............. என் செல்லக் குட்டி கேட்டால் சொல்லாமல் இருப்பேனா? இங்கு வந்து நமக்குத் தேவையான அல்லது பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம். நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால் நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்றும் படிக்கலாம் ஆனால் குறிப்பிட்ட நாளில் மீண்டும் புத்தகங்களைத் திருப்பி அளித்து விடவேண்டும். இதனால்,

- நம் அறிவு வளர்கிறது.
- நம்முடைய நேரம் பயனுள்ள முறையில் அமைகிறது.
- வேலைவாய்ப்புத் தொடர்பான நூல்களைப் படிப்பதால் நல்ல வேலையில் சேரவும் முடிகிறது.
- மூளை புத்துணர்ச்சி பெறுகிறது.
- தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

**தேனருவி:** மாமா! நூலகம் பற்றி நிறைய செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

**மாமா:** தேனருவி குழந்தைகளுக்கான சிறப்பம்சம் நூலகத்தில் உள்ளது. அது என்ன தெரியுமா?

- இங்கே குழந்தைகளுக்கான பிரிவு தனியாகவே உள்ளது.
- நூலகத்தில் உள்ள "வாசகர் வட்டம்" மூலமாக "நூலக தினத்தன்று" குழந்தைகளுக்கான போட்டிகள் அனைத்து நூலகங்களிலும் நடத்தப்படுகின்றன.
- போட்டிகளில் கலந்து கொள்வோருக்காகவும், போட்டித் தேர்வினை எழுதுவோருக்காகவும் தனியே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- ஒவ்வொரு குழந்தையும் அவரவர் வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும் அதில் நிறைய புத்தகங்களைச் சேமித்து வைத்து புத்தகம் படிக்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும்,

**தேனருவி:** நன்றி மாமா!............ நான் நம் வீட்டில் ஒரு "சிறிய நூலகத்தை" அமைப்பேன்.

அதில் நிறைய நூல்களைச் சேமித்து வைத்துப் படிப்பேன்

## அறிந்துகொள்வோம்

- படிப்புதான் ஒருவன் உயர வழி

–காமராசர்

- புத்தகங்கள் படிப்பதையே வழக்கமாக்குங்கள்.

–அப்துல்கலாம்



## வாங்க பேசலாம்

- உன் பள்ளி நூலகத்தில் உள்ள நூல்களுள் நீ படித்த ஏதேனும் ஒரு நூல் / கதை பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.
- அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.



# படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

W9BCY7

1. நூல் இச்சொல் உணர்த்தும் பொருள் ......................................

   (அ) புத்தகம் (ஆ) கட்டகம்

   (இ) ஒட்டகம் (ஈ) கோல்

2. அறிஞர் இச்சொல் உணர்த்தும் பொருள் ......................................

   (அ) அறிவில் சிறந்தவர் (ஆ) கவிதை எழுதுபவர்

   (இ) பாடல் பாடுபவர் (ஈ) மருத்துவம் பார்ப்பவர்

3. தேனருவி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............................

   (அ) தேன் + அருவி (ஆ) தே + னருவி

   (இ) தே + அருவி (ஈ) தேனி + அருவி

4. புத்துணர்ச்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................................

   (அ) புதுமை + உணர்ச்சி (ஆ) புத்து + உணர்ச்சி

   (இ) புதிய + உணர்ச்சி (ஈ) புது + உணர்ச்சி

5. அகம் இச்சொல்லின் எதிர்ச்சொல் .................................

   (அ) உள்ளே (ஆ) தனியே

   (இ) புறம் (ஈ) சிறப்பு

6. தேன் + இருக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ......................................

   (அ) தேன்இருக்கும் (ஆ) தேனிருக்கும்

   (இ) தேனிறுக்கும் (ஈ) தேனிஇருக்கும்

## வினாக்களுக்கு விடையளி

1. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?

2. நூலகத்தின் பயன்கள் யாவை?

3. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன உள்ளன?

4. நீ நூலகத்திற்குச் சென்று வந்ததைப் பற்றி எழுதுக.

## சொற்களை உருவாக்குவோமா?




**எ. கா: வரிக்குதிரை – வரி, குதிரை, குதி, திரை, வரை**

1 திருநெல்வேலி

= __________

__________

பனிப்புயல் = __________

__________ __________

## எழுத்துகளை முறைப்படுத்தி சொல் உருவாக்குக

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கூ | க் | ட | ளி | ம் | ப | ள் | |
| 2. | நூ | க | தி | ல | ம் | ன | | |
| 3. | ள் | ழ | ந் | கு | தை | க | | |
| 4. | ம | வ | ன | மை | லி | | | |
| 5. | பு | து | ர் | த் | ச் | ண | சி | |

## நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்திப் படிப்போமா?

PG84K9



நூலகத்திற்கு நீ சென்றுள்ளாயா? அங்குப் பலவகையான நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. சிறுகதைப் புத்தகங்கள், புதினங்கள், வரலாற்று நூல்கள், இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் என வரிசைப்படுத்தி வைத்திருப்பர். சிறுவர் இதழ்கள் செய்தித்தாள்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற இதழ்களும் உண்டு. ஆஹா! அங்குச் சென்று படிக்கத் தொடங்கினால் நேரம்போவதே தெரியாது. நூலகத்தின் பொறுப்பாளர் நூலகர் ஆவார். நூலகத்தில் அமைதி காத்திடல் வேண்டும்.